**செய்தி வெளியீடு எண் : 995** **நாள்: 19.06.2022**

திரு. பி.எஸ். ராமன் அவர்கள் எழுதிய வி.பி. ராமன் அவர்களின் வாழ்க்கை வரலாறு புத்தகமான “The Man who would not be King” வெளியீட்டு விழாவில், மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு.மு.க.ஸ்டாலின் அவர்களின் வாழ்த்துரையை இன்று (19.06.2022) மாண்புமிகு நீர்வளத் துறை அமைச்சர் திரு. துரைமுருகன் அவர்கள் வாசித்தார்.

நம் இதயங்களில் எல்லாம் வாழ்ந்து கொண்டிருக்கும் போற்றுதலுக்குரிய வி.பி.ராமன் அவர்களின் வாழ்க்கை வரலாற்று நூல் வெளியீட்டு விழாவில் பங்கெடுத்துக் கொள்வதை எனக்குக் கிடைத்த பெருமையாக நான் கருதுகிறேன்.

வி.பி.ராமன் அவர்களின் குடும்பம் வாழும் இடத்துக்கு 'லாயிட்ஸ் கார்னர்' என்று பெயர். லாயிட்ஸ் பகுதியின் இன்னொரு கார்னரில் வாழும் குடும்பம்தான் எங்களது கோபாலபுரம் குடும்பம். நீங்கள் ஒரு கார்னர் - நாங்கள் ஒரு கார்னர் - என்று சொல்வதன் காரணம் - எதிரெதிர் கார்னரைச் சேர்ந்தவர்கள் அல்ல; ஒரே சாலையில் இருமுனைகளைச் சேர்ந்தவர்கள்தான் நாம். அரசியல் ரீதியாக பிணக்குகள் ஏற்பட்ட நேரத்திலும் நம்மை யாரும் பிரிக்க முடியாது என்பதன் அடையாளம்தான் வி.பி.ராமன் அவர்களின் வாழ்க்கை வரலாற்று நூல் வெளியீட்டு விழாவுக்கு நான் அழைக்கப்பட்டது!

ஒருவேளை இப்படி ஒரு வாழ்க்கை வரலாற்று நூலை மரியாதைக்குரிய வி.பி.ராமன் அவர்கள் எழுதி இருந்தால் தலைவர் கலைஞர் அவர்கள் அந்தக் காலத்திலேயே வெளியிட வந்திருப்பார்.

அது நடக்காத நிலையில் - வி.பி.ராமன் அவர்களின் மகன் பி.எஸ்.ராமன் எழுத, கலைஞரின் மகனான நான் வந்து விழாவில் பங்கெடுத்திருக்கிறேன். எத்தனை புயல்கள், பூகம்பங்கள், சுனாமிகள் அடித்தாலும் சிலரது குடும்ப நட்பு பிரிக்க முடியாதது என்பதன் அடையாளமாக இந்த விழா மேடை அமைந்திருக்கிறது.

வி.பி.ராமன் அவர்களது குடும்பத்துக்கும் எங்கள் குடும்பத்திற்கும் பல்வேறு ஒற்றுமைகள் இருக்கின்றன.

- இரண்டு குடும்பமுமே தஞ்சை மாவட்டத்தைச் சேர்ந்தவர்கள்.

· இரண்டு குடும்பமும் சென்னையில் அருகருகில் ஒரே பகுதியில் வாழ்ந்து வருகிறோம்.

· திராவிட முன்னேற்றக் கழகத்துக்குச் சட்டதிட்டங்களை வகுத்த குழுவில் இடம்பெற்றவர் வி.பி.ராமன் அவர்கள்.

· திமுகவின் கலந்துரையாடல் கூட்டங்கள் ஆரம்ப காலத்தில் லாயிட்ஸ் கார்னர் இல்லத்தில் தான் நடத்திருக்கிறது.

· முத்தமிழறிஞர் கலைஞரின் நெருங்கிய அன்பு நண்பர். அடிக்கடி இவர்களது வீட்டுக்கு வந்து கலந்துரையாடிச் செல்வார்.

· இவை அனைத்துக்கும் மேலாக நான் இன்று வாழ்ந்து வரும் சித்தரஞ்சன் சாலை இல்லத்தில்தான் வி.பி.ராமன் அவர்களது திருமணம் அந்தக் காலத்தில் நடந்திருக்கிறது.

நான் இந்த விழாவில் பங்கெடுப்பதற்கு இத்தனை பொருத்தங்கள் இருக்கின்றன.

தன்னுடைய தந்தையின் வாழ்க்கை வரலாற்றை 'மகுடம் மறுத்த மன்னன்' என்ற தலைப்பில் பி.எஸ்.ராமன் அவர்கள் எழுதியிருக்கிறார். மகுடம் மறுத்தவராக இருந்தாலும், தான் வாழ்ந்த காலத்தில் முடிசூடா மன்னராக இருந்தவர்தான் வி.பி.ராமன் அவர்கள்.

கோட்டையில் கோலோச்சுகிறார்கள் என்பதைப் போல - கோர்ட்டில் கோலோச்சியவர் வி.பி.ராமன் அவர்கள்.

இந்தப் புத்தகத்தில் தன்னுடைய தந்தையார் இளம் வழக்கறிஞராக நுழைந்தபோது. யாரெல்லாம் சென்னை உயர்நீதிமன்றத்தில் கோலோச்சி வந்தார்கள் என்பதை பி.எஸ்.ராமன் அவர்கள் பட்டியலிட்டுக் காட்டியிருக்கிறார். அப்படி வி.பி.ராமனுடன் "இளம் துருக்கியர்களாக" யாரெல்லாம் இணைந்து நுழைந்தார்கள் என்பதையும் சொல்லியிருக்கிறார். பல்வேறு வழக்கறிஞர்களுக்கு இது வழிகாட்டிப் புத்தகமாக அமைந்திருக்கிறது.

இவை அனைத்துக்கும் மேலாக திராவிட முன்னேற்றக் கழகத்தின் தொடக்க காலத்தில் பல்வேறு வகையில் கழகத்துக்குத் துணையாக இருந்தவர் நம்முடைய வி.பி.ராமன் அவர்கள்.

இவை அனைத்தும் இந்தப் புத்தகத்தில் முழுமையாக இடம் பெற்றுள்ளது.

வழக்கறிஞரான வி.பி.ராமன் அவர்களது அறிவாற்றலை பயன்படுத்திக் கொள்ளும் நோக்கத்தோடு அவரை சென்னை சட்டக் கல்லூரியின் பகுதிநேரப் பேராசிரியராக நியமிக்கிறார் அன்றைய முதலமைச்சர் பெருந்தலைவர் காமராசர் அவர்கள்.

திமுகவின் உறுப்பினராக இருக்கக் கூடியவர், இப்படி கல்லூரிப் பேராசிரியராக இருக்கலாமா என்று சர்ச்சை கிளம்புகிறது. இது தொடர்பாக வி.பி.ராமன் அவர்களை நோக்கியே கேள்வி எழுப்பப்பட்டது. "அப்படி எந்த விதிமுறையும் இல்லை" என்று வாதிடுகிறார் நம்முடைய வி.பி.ராமன் அவர்கள். இவருக்காகவே, சட்டவிதி திருத்தப்படுகிறது. முழுநேர ஊழியருக்கு உள்ள அனைத்து விதியும் பகுதிநேர ஊழியருக்கும் பொருந்தும் என்று விதியைத் திருத்துகிறார்கள். இந்த விதி வந்தபிறகு தனது பகுதிநேரப் பேராசிரியர் பதவியைத் துறந்து, திராவிட முன்னேற்றக் கழகத்தில் தொடர்ந்தவர்தான் வி.பி.ராமன் அவர்கள்.

செயற்குழுவில் இடம்பெற்றார். சட்டதிட்டத்தை உருவாக்கும் குழுவில் இடம் பெற்றவர். திராவிடநாடு கொள்கையில் ஏற்பட்ட மாறுபாடு காரணமாக இயக்கத்தில் இருந்து 1961-ஆம் ஆண்டு தன்னை விடுவித்துக் கொண்டார். இருந்தாலும் 1967-ஆம் ஆண்டு தேர்தலில் பேரறிஞர் அண்ணாவுக்கும் மூதறிஞர் ராஜாஜிக்குமான சந்திப்பை ஏற்பாடு செய்து கூட்டணிக்கு உதவியவர் வி.பி.ராமன் அவர்கள்தான். பேரறிஞர் அண்ணா அவர்கள் மறைந்தபோது இறுதி ஊர்வலத்தில் வி.பி.ராமன் அவர்கள் நடந்து சென்றதை இந்தப் புத்தகம் குறிப்பிட்டிருக்கிறது. அதன்பிறகு அரசியல் ரீதியாக அவர் மாறான நிலைப்பாடுகள் எடுத்தாலும் - தலைவர் கலைஞருடனான நட்பு குறைந்தது இல்லை. அவரது இல்லத்தின் அனைத்துத் திருமணங்களிலும் தலைவர் கலைஞர் அவர்கள் பங்கெடுத்தது இந்த நூலில் தவறாமல் பதிவாகி இருக்கிறது.

பேரறிஞர் அண்ணா - முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் உரையைத் திருவல்லிக்கேணியில் கேட்டு அதன்பிறகு கழகத்தில் தன்னை இணைத்துக் கொண்டவர் வி.பி.ராமன் அவர்கள். அந்த நட்பு மட்டும் இறுதிவரை மறையவில்லை. வைதீகச் சடங்குகளில் அவருக்கு நம்பிக்கை இல்லை. தனது தந்தையார் மறைவின்போது சடங்குகள் செய்ய மறுத்தார் என்றும் - குடும்பத்தினர் வலியுறுத்தினார்கள் என்றும் -

"அண்ணாவிடம் சொல்லி ராமனை சடங்குகளைச் செய்யச் சொல்லுங்கள்" என்று காமராசர் அவர்கள் வலியுறுத்தினார் என்றும் இந்த புத்தகத்தில் இருக்கிறது.

பேரறிஞர் அண்ணா அவர்கள், 'உனக்கு நம்பிக்கை இல்லை என்றாலும் உன் தந்தைக்கு நம்பிக்கை இருந்துள்ளது' என்று சமாதானம் சொல்லி இருக்கிறார்.

"அப்படியானால் வேறு யாராவது செய்து கொள்ளட்டும்" என்று சொன்னவர் வி.பி.ராமன் என்பதை படிக்கும்போது மிகவும் உணர்ச்சிவசப்பட்டேன்.

அத்தகைய சடங்குகளைத் தனது வாழ்நாளில் இறுதிவரை பயன்படுத்தாமல் உறுதியாக இருந்தார் என்பதையும் இந்த புத்தகம் சொல்கிறது. எம்.ஜி.ஆர். அவர்கள் தனது கட்சியில் சேரச் சொன்னபோது இவர் சேரவில்லை. அதற்கு என்ன காரணம் என்பதை பி.எஸ்.ராமன் சரியாகச் சொல்லியிருக்கிறார்.

"தானும் ஒரு காலத்தில் பகுதியாக இருந்து வந்திருந்த திமுக என்ற அரசியல் கட்சியை எதிர்ப்பது என்பது அவருடைய இதயத்துக்கு ஏற்புடையதாக இல்லை" என்று பி.எஸ்.ராமன் சொல்லி இருக்கிறார்.

1991-ஆம் ஆண்டு டிசம்பர் மாதம் வி.பி.ராமன் அவர்கள் மறைகிறார். அதே ஆண்டில் ஜூன்-3 அன்று தலைவர் கலைஞர் அவர்களை கோபாலபுரம் இல்லத்துக்கு வந்து சந்தித்தார்.

மற்றபடி இந்தப் புத்தகம் என்பது மிகமிக அரிய பொக்கிஷம். வரலாற்றைத் தனிமனிதர்கள் தீர்மானிக்கிறார்கள் என்றால், அப்படித் தீர்மானித்த தனிமனிதர்களில் வி.பி.ராமனும் ஒருவர். அவர் மூலமாகத் தமிழ்நாட்டின் வரலாற்றையே இந்தப் புத்தகத்தின் மூலமாக மனக்கண் முன் நிறுத்திவிட்டார் பி.எஸ்.ராமன் அவர்கள்.

என்னைப் பொறுத்தவரையில், நீதிமன்றத்தில் தனது திறமைகளின் மூலமாக 'இன்னார் மகன்' என்ற பெருமையை தனது தந்தைக்கு வாங்கித் தந்ததைவிட, இப்படி ஒரு புத்தகம் எழுதியதன் மூலமாக அவரது தந்தைக்கு மாபெரும் கடமையை பி.எஸ்.ராமன் அவர்கள் செய்துவிட்டார். அந்த வகையில் பி.எஸ்.ராமனை மீண்டும் மனதாரப் பாராட்டுகிறேன்.

"லாயிட்ஸ் கார்னர் இல்லம் - அது ஒரு தேன்கூட்டின் உயிர்ப்பு மிகுந்த செயல்பாட்டுக் கூடமாக அமைந்திருந்தது" என்று பி.எஸ்.ராமன் அவர்கள் குறிப்பிட்டுள்ளார். அந்தத் தேன்கூட்டில் நாங்களும் உண்டு என்ற நட்புணர்வையும் உணர்த்தி, இந்த இனிய நிகழ்ச்சியில் நேரில் பங்கெடுக்க முடியாமல் போனதற்காக நான் வருக்கம் தெரிவித்துக் கொள்கிறேன்.

நன்றி! வணக்கம்!

**வெளியீடு: இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத்துறை, சென்னை–9**

அரசின் செய்திகளை உடனுக்குடன் தெரிந்துகொள்ள :

tndiprnews tndipr tndipr TN DIPR www.dipr.tn.gov.in